மலர் : 20
இதழ் : 5

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்
குழித்துறை மறைமாவட்டம்
மே 2025
தனிச்சுற்றுக்கு மட்டும்



## இயக்குநரிடமிருந்து......

இறை இயேசுவில் அன்பானவர்களே! உழைப்பை சிந்தி உலகையே வளமாக்கிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களினமாம் உங்கள் அனைவருக்கும் தொழிலாளர் தின நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மழலை முதல் பெரியோர் வரையிலும் பயன்படுத்தும் பொருட்கள், மண்ணில் உயிர்வாழ அன்றாடத் தேவைகள் முதற்கொண்டு மெய்ஞான, விஞ்ஞான கண்டுபிடிப்புகள் வரையிலும் அனைத்திலும் உழைப்பாளர்களின் உழைப்பு அடங்கியுள்ளது. இது மறைக்க முடியாத உண்மையுமே.

பூமி தான் சுழல்வதை நிறுத்திக்கொண்டால் இவ்வுலகத்தின் இயக்கம் நின்றுவிடுவது போன்று உழைப்பாளர்களின் உழைப்பும், கடின முயற்சியும் நின்றுவிட்டால் நாட்டிலும், வீட்டிலும், மனிதரிலும் வளர்ச்சி என்பது இல்லாமல் நின்று விடும்.

இருட்டைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவதே மேல் என்பது போன்று முயற்சி என்ற ஒன்றைக் கையாளாமல் காலத்தையும், நேரத்தையும் பழித்துரைத்துக் கொண்டே வாழ்வை அழித்துக் கொண்டிருக்கிறோம். "முன்னேற்றம் வேண்டுமா முயற்சி செய்து பார்". ஒவ்வொருவருடைய வாழ்க்கையானது, அவர்கள் எடுக்கும் முயற்சியைப் பொறுத்தே, இலக்கை அடைகிறதா அல்லது வீழ்ச்சியடைகிறதா எனத் தீர்மானிக்கப்படுகிறது. முயற்சியை கைவிடும் போதெல்லாம் நாம் தோல்வியின் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

மனிதராகிய நாம், நம் வாழ்க்கைப் பயணத்தின், ஆரோக்கியத்திலும், பொருளாதாரத்திலும் வீழ்ச்சியுற்றால், நம் சமூகத்தை மாற்றினால் நாம் வளர்ச்சியடைந்து விடலாம் என நினைக்கின்றோமே தவிர, நான் மாறினால் தான் என்னைச் சூழ்ந்தவை மாறும் என்பதை அறியா வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.

என்னால் முடியாது என்பது மூடநம்பிக்கை
என்னால் முடியுமா என்றால் அவநம்பிக்கை
என்னால் முடியும் என்பதே முழு நம்பிக்கை

வேலை செய்யாத கை வறுமையை வருவிக்கும், விடாமுயற்சியுடையோரின் கையோ செல்வத்தை உண்டாக்கும் (நீ.மொ. 10:4) என்ற விவிலியக் கூற்றை கருத்தில் கொண்டவர்களாய் விடாமுயற்சியோடு உழைப்போம். வறுமையை ஒழித்து வளமையை நிலைநாட்டுவோம். நாம் மாற, நம் சமூதாயம் மாற அன்பியங்களில் முயற்சியால் வரும் முன்னேற்ற விதைகளை விதைப்போம். நம்பிக்கை என்னும் ஒளியை அன்பியங்களில் பாதையாக்குவோம், உழைக்கும் தொழிலாளர்களுக்கு மதிப்பளிப்போம். நம் வாழ்வு முன்னேற்றமடையும் என மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி **M. ஆல்வின் விஜய்**
இயக்குநர், அன்பிய பணிக்குழு

முதல் வாரம்

# உழைப்பு உயர்வு தரும்!

செல்வி. **மேரி சுசிலா ராணி,**
ஆசிரியை, மல்லன்விளை.

வாழ்க்கை பயணத்தில் நாம் பல சாதனைகளை அடைய நமக்கு வேண்டிய மூலதனம் ஒன்றே உழைப்பு. அந்த உழைப்பு உண்மையாக இருந்தால்தான் உயர்வு தானே நம்மை தேடிவரும். உழைக்கும் கரங்கள் வணக்கத்துக்குரியவை. அறிவுழைப்பு, உடலுழைப்பு என வகைப்படுத்தப்படும் உழைப்பில் அறிவுழைப்பை உயர்ந்ததாகவும், உடலுழைப்பைத் தாழ்ந்ததாகவும் பார்க்காமல், அறிவுழைப்பும், உடலுழைப்பும் இணைவதே வளர்ச்சி என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**உழைப்பின் மேன்மை:**

உழைப்பே ஒவ்வொருவருடைய வாழ்வையும் மேன்மைப்படுத்துகிறது. உழைப்பு மனிதனை பண்படுத்துகிறது. தன்னம்பிக்கையை ஊட்டுகிறது. ஒருவரின் வாழ்வை உயர்த்துகிறது. முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது. தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உணவை உண்பவர்களே மேலானவர்கள். "உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" என்கிறார் தூய பவுல். "உழைக்காமல் உண்பவர்கள் திருடர்கள்" என்கிறார் காந்தியடிகள்.

**தொடர் முயற்சி:**

தேனீக்கள் தேனை சேகரிப்பது போல், எறும்புகள் ஓய்வில்லாமல் எப்போதும் உழைத்துக்கொண்டே இருப்பதுபோல, சிலந்தி தனது வலை எத்தனை முறை கலைக்கப்பட்டாலும் மீண்டும் அந்த வலையை பின்னுவது போல, நாம் எந்த ஒரு வேலையையும் தொடர் முயற்சியுடன் செய்து முடித்தால் வெற்றி நிச்சயமே. "நான் எப்போதும் உழைத்துக் கொண்டே இருப்பேன். என்னால் ஒருபோதும் சும்மா இருக்க முடியாது" என்கிறார் ஆபிரகாம் லிங்கன். உழைப்பும், முயற்சியும் வாழ்வின் எதார்த்தங்களாகக் கொள்வோம். "தெய்வத்தால் ஆகாது எனினும், முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்" என்கிறார் திருவள்ளுவர்.

**கடின உழைப்பு:**

ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தை அடைவதற்கு உயர் ஆவலை தருவது கடின உழைப்பு. சோம்பலை தவிர்த்து, ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் உழைக்கும்போது பல சாதனைகளை அடையலாம். இந்தியாவை வல்லரசு நாடுகளுக்கு இணையாக உயர்த்த கனவு கண்ட 'இந்தியாவின் ஏவுகணை நாயகன்' - ஏ.பி.ஜே. அப்துல் கலாம் வீடுகளுக்கு செய்தித்தாள் போடும் "பேப்பர் பாய்" வேலையை செய்தவர். தன்னுடைய கடின உழைப்பினால் உயர்ந்த நிலையை அடைந்து

பல விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றார். புனிதையாக போற்றப்படும் அன்னை தெரசாவின் கடின உழைப்பே நோபல் பரிசை பெறச் செய்தது. விண்வெளியில் பயணம் செய்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ், இருமுறை நோபல் பரிசு பெற்ற மேரி கியூரி ஆகியோரின் கடின உழைப்பே அவர்களை சாதனையாளர்களாக மாற்றியது.

**காலத்தின் அருமை:**

தகுதியான உழைப்பை கடுமையாகச் செய்யக்கூடிய வாய்ப்பை அளிப்பதுதான் வாழ்க்கை. எனவே, வாழ்வின் ஒரு நொடி கூட பொருளற்று வீணாகப் போய்விடக் கூடாது. "காலம் பொன் போன்றது" என்ற முதுமொழியைக் கேட்டிருக்கிறோம். ஆனால், காலம் பொன்னைவிட மேலானது. காலமும், நேரமும் ஒருமுறை இழந்தால் மீண்டும் அது கிடைக்கப் போவதில்லை. எனவே, கடந்த காலத்தைப்பற்றி கவலைப்படாமல் நிகழ்காலத்தை கண்முன் கொண்டு உழைத்தால் வெற்றி நிச்சயம்.

**முன்னேற்றத்தின் மூலதனம்:**

நமது பலவீனங்கள், தோல்விகள், திறமையற்ற தன்மைகள், வறுமை, ஊனம் இவையனைத்தையுமே முன்னேற்றத்தின் மூலதனமாகக் கொண்டு தொடர் முயற்சியும், கடின உழைப்பும், தன்னம்பிக்கையும் கொண்டு திட்டமிட்டு உழைத்தால் சாதனை படைக்கலாம். முடியும் என்ற தன்னம்பிக்கையோடு உழைப்பவனுக்கு வாழ்வில் தோல்வி என்பது கிடையாது. உழைக்கத் தெரிந்தவனுக்கு தோல்விகளெல்லாம் முன்னேற்றத்தின் படிக்கற்கள் தான்.

**சாதனையாளர்கள்:**

நம்முள் இருக்கும் ஆற்றலை முழுமையாக, முறையாக பயன்படுத்தும்போது தான், அளப்பரிய சாதனைகளை படைக்க முடியும். அறிவியலின் தந்தை தாமஸ் ஆல்வா எடிசன் பல தோல்விகளுக்குப் பிறகு ஒளிரும் விளக்கைக் கண்டுபிடித்தார். ஏழை விறகு வெட்டியின் மகன் ஆபிரகாம் லிங்கன் பலமுறை தோல்விகளைச் சந்தித்துதான், அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார். நெசவாளியின் மகன் கொலம்பஸ் புதுயுகத்தைக் கண்டுபிடித்தார். சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட டாக்டர் அம்பேத்கார் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தையே இயற்றினார். இவர்கள் எல்லோருமே உழைப்பினை நம்பி உழைத்தவர்கள்.

**விவிலிய மேற்கோள்கள்:**

"தம் கையால் உழைத்து, எளிய வாழ்க்கை நடத்துபவரே மேலானவர்" என்று நீதிமொழிகள் நூல் கூறுகிறது. "விடாமுயற்சியுடையோரின் கைகள் செல்வத்தை சேகரிக்கும்" என சாலமோனின் ஞானம் உரைக்கிறது. "அறிவுடன் இணைந்து உழைப்பு இருக்க வேண்டும்" என சபை உரையாளர் கூறுகிறார். "நிலத்தில் வியர்வை விழ உழைத்து உண்" என்று ஆதாம் வழியாக மானிடருக்கு கடவுள் தொடக்க நூலில் கட்டளையிடுகிறார். இவ்வாறாக விவிலியத்தில் உழைப்பின் மேன்மைகள் வலியுறுத்தப்படுகிறது.

**வாழ்க்கை நம் கையில்:**

நமக்குள் அளவற்ற ஆற்றலும், அறிவும், சக்தியும் குடிகொண்டிருக்கிறது. "என்னால் எதையும் சாதிக்க முடியும்" - என்ற நேர்மறை எண்ணங்கள் ஆழமாக வேர்விடும்போது நம்பிக்கைப் பிறக்கிறது. வெற்றியும், தோல்வியும் நமது கையில் தான் உள்ளது. பலவித அழிவுகளையும், பேரழிவுகளையும் எதிர்கொண்டு, அவைகளைப் பற்றி கவலைப்படாமல் தொடர்ந்து உழைத்ததால் தான் நலிந்த நாடாக இருந்த ஜப்பான் இன்று வளர்ந்த நாடாக உருவெடுத்துள்ளது. நாம் நமது முயற்சியில் வெற்றி பெறும்போது, பிறர் நம்மை பாராட்டாவிட்டாலும், நமது தோளை நாமே தட்டிக்கொடுத்து மனம் தளராது உழைக்கும் நேர்மறை எண்ணம் நம்மிடம் உருவாக வேண்டும்.

ஆகவே, உழைப்பே ஒரு மனிதனின் உயர்வுக்கான திறவுகோல். வாழ்வில் உயர்வடைய வாழ்த்துக்கள்...

இரண்டாவது வாரம்

# புனித சூசையப்பர் வழி உழைப்பு

திருமதி. **ஷீபா ராபின் ஜோஸ்,**

அன்பிய ஒருங்கிணைய தலைவர், வெள்ளிகோடு.

**புனித சூசையப்பர்**

இயேசுவை வளர்த்த தந்தை புனித சூசையப்பர் (Saint Joseph) கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில், தொழிலாளர்களின் பாதுகாவலராகப் போற்றப்படுகிறார். தமது தகுதிக்கும் அறிவுத்திறனுக்கும் உடல் வலிமைக்கும் ஏற்ப, உழைக்கும் கரங்களைப் போற்றும் நாள் மே தினம். இறைவனின் படைப்புத் தொழிலின் பங்காளிகளான தொழிலாளர்களை, கரம் குவித்து வணங்கி வாழ்த்திடும் நன்னாள். உழைப்பை புனிதப்படுத்திடவும், உழைக்கிறவர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் வண்ணமும் திருத்தந்தை 12-ம் பத்திநாதர், 1955-ல் இந்த விழாவை ஏற்படுத்தினார். மேலும், தொழிலாளர் தினத்தன்று தொழிலாளர்களின் பாதுகாவலர் சூசையப்பர் திருவிழாவையும் இணைத்துச் சிறப்பிக்குமாறும் அறிவித்தார். அன்று முதல் மே தினம், சூசையப்பர் தினம் என்று தேம்பாவணி போன்ற காப்பியங்கள் விரித்துரைக்கின்றன.

இயேசு கிறிஸ்துவின் தாயான மரியாளின் கணவர் சூசையப்பர். அவர் ஒரு நேர்மையாளர், நீதிமான், அயராது உழைப்பவர் (மத் 1:19). கன்னி மரியாளின் கணவரும், இயேசுவின் வளர்ப்பு தந்தையுமான புனித சூசையப்பரைப் பற்றி விவிலியம் மிகச் சுருக்கமாக "நீதிமான்"

என்ற வார்த்தையால் விளக்குகின்றது. நீதிமான் என்ற வார்த்தை அவர் கடவுளுக்கு மிகவும் பணிந்து நடப்பவர் எனக் காட்டுகிறது. தச்சுத் தொழில் செய்து, தந்தைக்குரிய பொறுப்பேற்று, கணவருக்குரிய கடமைகளை நிறைவேற்றி குடும்பத்தை நல்லமுறையில் நடத்தினார். கன்னிமரியின் பேறுகாலத்துக்கு சத்திரம் தேடி அலைந்தபோதும், குழந்தையைக் கொடுங்கோலன் ஏரோதுவின் பிடியிலிருந்து விடுவிக்க எகிப்துக்கு ஓடிச் சென்றபோதும் பல இன்னல்களை தாங்கிக் கொண்டார். இதன் வழியாக, இயேசுவின் மீட்புப் பணியில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

**உழைப்பின் மேன்மை**

தோல்வி அடைவதற்கு பல வழிகள் இருக்கலாம். ஆனால், வெற்றி பெறுவதற்கு ஒரே வழி உழைப்புதான். வாழ்க்கையில் முன்னேற குன்றாத உழைப்பு, குறையாத முயற்சி, வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை அவசியம். உழைப்பாளிகள் முதுகெலும்பு உடைந்திட உழைத்தால்தால் நாட்டின் முதுகெலும்பான வணிகம் தலைநிமிர்ந்து நிற்கும். உழைப்பவரின் உதிரத்தை, உரிமைகளை உலகமயம் உறுஞ்சும் நிலை மாற வேண்டும். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்க வேண்டும். அதிக வேலைநேரம் குறைந்து மனித மாண்புடன் முதலாளிவர்க்கத்தால் வழிநடத்தப்பட வேண்டும். தொழிலாளர்கள் ஒன்றிணைக்கப்பட்டு, முறையான அமைப்புகள் தொடங்கப்பட்டு அரசின் நிதி உதவியோடு அவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்திட வேண்டும். வேலை உத்திரவாதம், ஓய்வூதியம், காப்பீடுத் திட்டங்கள் ஆகியவை ஏழை-எளிய-பாமர மக்களையும் சென்றடைய வழிகாட்டுதல்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். கல் உடைப்பவர் முதல் கணனி தட்டுபவர் வரை அனைவரும் தொழிலாளர்களே! வளர்ந்து வரும் காலச்சூழலில் எந்த வேலையையும் இழிவாக எண்ணாமல் அனைத்து வேலைகளையும் ஏற்று திறமையோடு செய்திட இளையோர் சமுதாயம் முன்வர வழிகாட்டுதல்கள் தேவை.

திருக்குடும்பத்தின் தலைவர், வளம் தரும் வளனார், மாமுனி சூசையப்பரின் வழியில் நம் பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி, இறைவனின் மகிமையில் மனநிறைவடைய உங்களை வாழ்த்துகின்றேன்.

**சிந்தனைக்கு**

1. நமது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலைவாய்ப்புகள் நமக்கு தரப்பட்டுள்ளதா? அவ்வாறு தரப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் எவை?
2. நமது குடும்பமும், சமுதாயமும் முன்னேற நம்முடைய உழைப்பைச் செலவிட நாம் தயாராக இருக்கின்றோமா?
3. உழைப்போர் மாண்புகள் மேலும் உயர்வடைய உங்கள் பரிந்துரைகள் என்னென்ன?

மூன்றாவது வாரம்

# "மாற்ற முடிந்ததை மாற்றவும் மாற்ற முடியாததை ஏற்றுக்கொள்ளவும்"

அருட்பணி. **ச. மரிய இராஜேந்திரன்**

"ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது, அது மாற்ற முடியாத ஒன்றை ஏற்கும் வலிமையும், மாற்றக்கூடிய ஒன்றை மாற்றும் பொறுப்புணர்வும் கொண்டிருக்கிறதா என்பதைப் பொறுத்தது" – என்று சமூக அறிவியலாளர்கள் கூறுகிறார்கள்.

## 1. மாற்றத்தில் இறைஞானம்

இந்த நோக்கம் திருஅவை பணிகளுடன் ஒத்துப்போகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "நாம் எல்லாரும் மாற்றத்தின் கருவிகளாக இருக்க வேண்டும்" என்று கூறினார். உலகத்தில் இயல்பாக காணப்படும் அநீதியை மாற்றவேண்டியது நமது கடமையும், அழைப்பும் ஆகும். ஆனால், சில தருணங்களில் சில சூழ்நிலைகள் நமக்குப் புரியாமல் அல்லது அறியாமலே ஏற்படுகின்றன. அவற்றை நாம் மாற்றவே இயலாது. அத்தருணங்களில், நாம் இறைவனிடம் அமைதியையும், ஞானத்தையும் வேண்டிக்கொள்ள வேண்டும்.

"மாற்றத்திற்கான பாதை, பிறரை ஏற்றுக்கொள்வதிலும், நாம் ஏற்க வேண்டிய நிலைகளில் கடவுளின் செயல்பாட்டை காண்பதிலும் தொடங்குகிறது. நம் விசுவாசம் ஒரு செயல்படக்கூடிய விசுவாசமாக இருக்க வேண்டும். செயலற்றதாக இருந்து, முடங்கிக்கிடக்கக் கூடாது.

## 2. மாற்றம் ஒன்றே மாறாதது

நாம் வாழும் உலகம் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. நம் வாழ்க்கையிலும், குடும்பத்திலும், சமூகத்திலும் சிலவற்றைப் பார்த்தால் நம்மால் மாற்ற இயலும். சிலவற்றைப் பார்த்தால் நம்மால் மாற்ற இயலாதவையாகத் தோன்றும். ஆனால், நம்முடைய விசுவாச வாழ்க்கை இந்த இரண்டிற்கும் இடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்தக் கற்றுத்தருகிறது. மாற்ற இயல்வதை மாற்ற இயலாதவையாக விட்டுவிடாமல், அது இறைவனின் அருளால் மாற்றப்பட முடியும் என்ற நம்பிக்கை வேண்டும்.

## 3. மாற்றக்கூடிய சமூகக் கட்டமைப்புகள்

- சமூகத்தில் காணப்படும் நீதி நியாயமற்ற நிலைகள்
- குடும்பங்களில் காணப்படும் கருத்து வேறுபாடுகள்
- ஏழைகள், வறியோரின் நிலைமைகள்
- குடும்பங்களில் உள்ள பாலினச் சமநிலை
- கல்வி, பொருளாதாரம் போன்ற துறைகளில் நியாயமான அணுகுமுறை

- சாதி, மதம், இனம் அடிப்படையிலான பாகுபாடுகள்
- தொழிலாளர் நலன் மற்றும் உரிமைகள்

இவைகள் எல்லாம் மனிதன் தனது விழிப்புணர்வு, ஒன்றிணைப்பு, சமூக இயக்கங்கள் மூலமாக மாற்ற இயலும். சமூக சீர்திருத்தம் அல்லது மறுமலர்ச்சி என்பது இவற்றிலிருந்தேப் பிறக்கிறது.

### 4. மாற்ற இயலாத சூழ்நிலைகள்

சில தருணங்களில் மாற்ற முடியாததை ஏற்றுக்கொள்வதற்கும், அதன் அர்த்தத்தை உணர்ந்து கொள்வதற்கும் கடவுள் நமக்கு ஞானத்தைத் தருகிறார்.

- ஒரு நோயினால் அல்லது இயற்கை பேரிடர் காரணமாக வரும் சோதனைகள் (பொருளாதார நெருக்கடி, புயல், வறட்சி போன்றவை)
- நம்மால் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைகள்
- ஒருவரின் பிறப்பிடம் அல்லது பிறப்பில் வரும் வரம்புகள்
- உடல் நலச் சவால்கள் அல்லது பிறர் காரணமாக ஏற்படும் சோதனைகள்

இவை நம்மால் மாற்ற இயலாதவை. ஆனால், இவற்றை மாற்ற சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள், நலமளிக்கும் இயக்கங்கள், சமூக ஆதரவு மற்றும் சமூக மாற்றம் தேடும் அமைப்புகளோடு இணைந்துச் செயலாற்றி மாற்றத்தை உருவாக்கலாம்.

**திறனாய்வுக்கு :**

1. நாம் வாழும் உலகில் மாற்ற இயல்பவை, மாற்ற இயலாதவை என்னென்ன?
2. மாற்ற இயலாத நிகழ்வுகளை நாம் எவ்வாறு அணுக வேண்டும்?

நான்காவது வாரம்

## உயர்கல்வி வழிகாட்டுதலின் தேவை!

அருட்பணி. **ஜோஸ் ராபின்சன்**,
அன்னை ஆதா பயிற்சிமையம்.

நமது குமரி மாவட்டம் படித்தும் வேலைவாய்ப்பில்லாமலிருக்கும் இளைஞர்களை அதிகமாகக் கொண்ட ஒரு மாவட்டமாகத் திகழ்கின்றது. உயர்கல்விக்கான வழிகாட்டுதலைப் பெறாமல் உயர்கல்வியினை மேற்கொள்வது வேலை வாய்ப்பின்மைக்கான ஒரு முக்கியமான காரணமாகப் பார்க்கப்படுகிறது.

நமது மாணவ மாணவிகளுக்கு பல நிலைகளில் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது.

- அவர்களின் இலட்சியக் கனவினைக் கண்டுபிடிக்க வழிகாட்டுதல்.
- அவர்களின் இலட்சியத்தை அடைவதற்கான திறமைகளையும் திறன்களையும் கண்டுபிடித்தல்.
- அவர்களது திறமைகள் மற்றும் திறன்களுக்கேற்ற படிப்புகளை மேற்கொள்ள வழிகாட்டுதல்.
- அவர்கள் மேற்கொள்ளும் படிப்புகளுக்கேற்ற வேலைகளைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டுதல்.
- அன்றாடம் உருவாகிக் கொண்டிருக்கும் புதிய வாய்ப்புகளைப் பற்றிய வழிகாட்டுதல் வழங்கல்.
- வளர்ச்சி மற்றும் மாற்றங்களை மேலாண்மை செய்ய வழிகாட்டுதல்.

**உயர்கல்வி வழிகாட்டுதலின் அம்சங்கள்:**

❍ ***ஆலோசனை:* (Counselling)**

மாணவ மாணவிகள் தங்கள் ஆர்வங்கள் மற்றும் திறன்களைக் கண்டறிய ஆலோசனை மற்றும் கலந்தாய்வு தேவையான ஒன்றாகும்.

❍ ***மதிப்பீடு:***

பல்வேறு ஆளுமை மற்றும் திறனறித் தேர்வுகள், மாணவ மாணவிகளின் பலம்கள் மற்றும் பலவீனங்களைக் கண்டறிந்து அவர்களின் திறன்கள் மற்றும் ஆர்வங்களுள் ஒத்துப்போகும் சாத்தியமான உயர்கல்விப் பாதைகளை அடையாளம் காண உதவும்.

❍ ***ஆய்வு:***

மாணவ மாணவிகள் தெரிவு செய்யப்போகும் உயர்கல்விக்குத் தொடர்பான உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்பு துறைகளைப்பற்றி தேர்ந்துத் தெளிவதாகும். இதன் மூலம் எதிர்காலம் குறித்த தெளிவோடு மாணவ மாணவிகள் உயர்கல்வியினை மேற்கொள்ள இயலும்.

**உயர்கல்வி வழிகாட்டுதலின் நன்மைகள்:**

- மாணவ மாணவிகள் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.
- மாணவ மாணவிகளின் மன அழுத்தத்தைக் குறைக்கிறது.
- தன்விழிப்புணர்வை மேம்படுத்துகிறது.
- தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கிறது.
- வேலை இழப்பு அல்லது தொழில் மாற்றங்கள் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் தைரியத்தை நமது இளைஞர்கள் பெறுகிறார்கள்.

நிறைவாக, நமது மாணவ மாணவிகள் இலட்சியக் கனவோடு தொடங்கும் கல்விப்பயணம் வெற்றியின் பயணமாக சாதனையின் பயணமாக மாறிட அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல் வழங்குதல் நமது கடமையும் காலத்தின் கட்டாயமும் ஆகும்.

# நலத்திட்டங்கள்

## புத்தன்கடை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| பாரதப்பள்ளி | புனித அன்னைதெரசாள் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 4,500/- |
| குலசேகரம் | 6-வது அன்பியம் | கைம்பெண் (மாதந்தோறும்) | 1 | 500/- |
| | | மாற்றுத் திறனாளி (மாதந்தோறும்) | 1 | 500/- |
| | புனித லூர்து அன்னை அன்பியம் | திருமண உதவி | 1 | 5,000/- |
| நாகக்கோடு | புனித லூர்து அன்னை அன்பியம் | மருத்துவ உதவி Anna Cancer Care Centre | 1 | 5,000/- |
| குழிச்சல் | முதல் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 2,000/- |
| | 3-வது அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | 4-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,300/- |
| மாத்தூர் | புனித சின்னப்பர் அன்பியம் | திருமண உதவி | 1 | 2,000/- |

## காரங்காடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| மாங்குழி | 5-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| ஆரோக்கியபுரம் | 3-வது அன்பியம் | கருணை இல்லம் | 1 | 8,500/- |
| | 8-வது அன்பியம் | ஏழைக்கு வீடு கட்ட | 1 | 5,000/- |
| | 2-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| முரசங்கோடு | 3-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| சேவியர்புரம் | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| காரங்காடு | புனித டோமினிக் சாவியோ அன்பியம் | மருத்துவ உதவி புற்றுநோயாளி | 1 | 40,000/- |
| சித்தன்தோப்பு | ஒருங்கிணையம் சார்பாக | மருத்துவ உதவி புற்றுநோயாளி | 2 | 8,000/- |

## திரித்துவபுரம் மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| சந்தணபுரம் | தூய அந்தோணியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | தூய அகுஸ்தினார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | ஏழைகள் நல உதவி மளிகைப் பொருட்கள் | 10 | 3,000/- |
| | | ஏழைகள் நல உதவி | 2 | 1,000/- |
| மருதங்கோடு | தூய பவுல் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 3,750/- |
| | | ஏழைகள் நல உதவி | 1 | 750/- |
| | தூய அல்போன்சாள் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,750/- |
| | தூய அன்னைதெரசாள் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| | தூய தோமா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| | தூய தேவசகாயம் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 3,500/- |
| | தூய பவுல் அன்பியம் | | 1 | 12,000/- |
| | தூய லூர்து அன்பியம் | | 1 | 2,500/- |
| மேல்புறம் | தூய அமல அன்னை அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| | தூய குழந்தை இயேசுவின் தெரசாள் அன்பியம் | கல்வி உதவி | 1 | 1,000/- |
| தோமையார்புரம் | தூய அந்தோணியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 3,000/- |
| நல்லாயன்புரம் | தூய அன்னைதெராசா அன்பியம் | ஏழைகள் நல உதவி- ஆட்டிக்குட்டி | 1 | 3,500/- |
| | தூய குழந்தை இயேசு அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| | தூய ஜாண் போஸ்கோ அன்பியம் | | 1 | 2,000/- |
| | தூய ஆரோக்கிய அன்னை அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| நல்லூர் | தூய செபஸ்தியார் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 5,000/- |
| | தூய சூசையப்பர் அன்பியம் | | 1 | 11,000/- |
| சிலுவைபுரம் | 9-வது அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| | 15-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 10,000/- |
| லூர்துகிரி | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | ஏழைகள் நல உதவி - மளிகைப் பொருட்கள் | 1 | 4,500/- |
| பரக்குன்று | தூய யோவான் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,500/- |

## முளகுமூடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| வெள்ளிகோடு | அன்னை வேளாங்கண்ணி அன்பியம் | மருத்துவ உதவி புற்றுநோயாளி | 1 | 4,200/- |
| முளகுமூடு | தூய பவுல் அன்பியம் | ஏழைகள் நல உதவி ரூ. 2,000/- வீதம் | 4 | 8,000/- |
| கல்குறிச்சி | தூய அந்தோணியார் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| | தூய குழந்தை தெரசாள் அன்பியம் | மனவளர்ச்சி குன்றிய முதியோர் இல்லம் | 4 | 7,000/- |
| அப்பட்டுவிளை(சூ) | அன்பியங்கள் சார்பாக | குழந்தைகள் காப்பகம், பட்டரிவிளை | 1 | 15,000/- |
| செம்பருத்திவிளை | அன்பியங்கள் சார்பாக உள்ள மனித நேய காணிக்கை ஒரு பகுதி | அன்னை ஆசிரமம், தோவளை | 1 | 40,000/- |
| | அன்பியங்கள் சார்பாக உள்ள மனித நேய காணிக்கை இன்னொரு பகுதி | பங்கிலுள்ள ஏழைகளுக்கு (பொருட்கள்) | 49 | 30,000/- |
| தக்கலை | கார்மல் அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 35,000/- |
| | ஆரோக்கிய அன்னை அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 2,000/- |
| விலவூர் | தூய சவேரியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |

# திருஅவையில் மணம் கமிழ்ந்த விண்ணக மலர்






இலத்தீன் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவில் உள்ள பெயோனஸ் ஏரஸ் என்னும் சிறு நகரத்தில் 1936 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதி மரியா ஜோஸ் பிரான்சிஸ்கோ ரெஜினா சிவோரி தம்பதியினருக்கு மூத்த மகனாக ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர்தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். இவரது இயற்பெயர் ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ.

1972 ஏப்ரல் 22 ஆம் நாள் இயேசு சபையில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1992 ஜூன் 27 ஆம் நாள் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1998 பிப்ரவரி 28 ஆம் நாள் ஆயர் பெர்கோலியோ புவேனோஸ் ஐரேஸ் உயர்மறைமாவட்டத்தின் பேராயர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

2001 ஆம் ஆண்டில் பெர்கோக்லியோ கார்டினாலாக உயர்த்தப்பட்டார்.

மார்ச் 19, 2013 அன்று. புனித ஜோசப் பெருவிழா அன்று, அவர் 266-ஆம் திருத்தந்தையாக நியமிக்கப்பட்டார். திருஅவையின் பயனுறு பல மாற்றங்களை ஏற்படுத்திய இவர் 22 ஏப்ரல் 2025 விண்ணகத்தில் மலர்ந்துள்ளார்.

## மறைமாவட்ட புதிய நிர்வாகிகள்

### மாத்திரவிளை மறைவட்ட நிர்வாகிகள்

தலைவர் : திருமதி. K. மரியரெத்தினபாய்
து.தலைவர் : திரு. M. ஆன்றனி சேவியர்
செயலர் : திருமதி. M. ஜெயந்தி
து.செயலர் : திருமதி. S. ஜீவ ராணி
பொருளர் : திரு. Y. செல்லம்

### புத்தன்கடை மறைவட்ட நிர்வாகிகள்

தலைவர் : திரு. N. R. அமல்ராஜ்
து.தலைவர் : திரு. ஸ்டீபன்
செயலர் : திருமதி. G. M. ஷெர்லின்
து.செயலர் : திரு. சதீஷ்
பொருளர் : திருமதி. ஃப்ளோரிடா மேரி

### திரித்துவபுரம் மறைவட்ட நிர்வாகிகள்

தலைவர் : திரு. ஜெகன் பாபு
து.தலைவர் : திரு. பன்னீர்செல்வம்
செயலர் : திருமதி. பிறேமகுமாரி
து.செயலர் : திருமதி. புஷ்பலீலா
பொருளர் : திரு. சுபின்ராஜ்

### வேங்கோடு மறைவட்ட நிர்வாகிகள்

தலைவர் : திரு. A. ஜொறால்டு சேவியர்
து.தலைவர் : திருமதி. றோஸ்மேரி
செயலர் : திருமதி. T. அனிதா
து.செயலர் : திருமதி. R. ஜெயந்தி
பொருளர் : திருமதி. M. ஜெனீஷ்

## பங்கின் புதிய நிர்வாகிகள்

**இதயபுரம்**

தலைவர் : திருமதி. ஆன்றணி அமுதகலா
து.தலைவர் : திருமதி. லூர்துமேரி
செயலர் : திருமதி. ஷீபா
து.செயலர் : திருமதி. கமலா
பொருளர் : செல்வன். ராஜன்

## ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 04.05.2025 | திப. 5: 27b-32, 40b-41, | தி.வெ. 5: 11-14 | யோவா. 21: 1-19 |
| 2 | 11.05.2025 | திப. 13: 14, 43-52 | தி.வெ. 7: 9, 14b-17 | யோவா. 10: 27-30 |
| 3 | 18.05.2025 | திப. 14: 21b,-27 | தி.வெ. 21: 1-5 | யோவா. 13: 31-33a, 34-35 |
| 4 | 25.05.2025 | தி.ப. 15: 1-2, 22-29 | தி.வெ. 21: 10-14, 22-23 | யோவா. 14: 23-29 |

அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு.... 9487110298, 8870513177

அன்பிய இயக்குநர்
அன்பிய பணிக்குழு, ஆயர் இல்ல வளாகம்,
உண்ணாமலைக்கடை - 629 179

# அன்பிய பணிக்குழு, குழித்துறை மறைமாவட்டம்

## நடத்தும் இணையவழி

## தனிநபர் மற்றும் குழு நடனப் போட்டிகள் – 2025

### நடனப் போட்டிக்கான விதிமுறைகள்

- நடனப் போட்டிகள் 3 பிரிவுகளாக நடைபெறும்.
  1. 17 வயதிற்கு கீழுள்ளவர்கள்   2. 17 வயதிற்கு மேலுள்ளவர்கள் மற்றும்
  3. குழுநடனப் போட்டி (அனைத்து தரப்பினரும்). பங்கிற்கு ஒரு குழுவினர் பங்கேற்கலாம்). (குறைந்தது 6 நபர்கள் முதல் அதிகபட்சம் 12 நபர்கள் வரை)
- போட்டிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பாடல்கள் கிராமியப் பாடலாக மட்டுமே இருத்தல் வேண்டும்.
- தனிநபர் நடனப் போட்டி 2 நிமிடத்திற்கு குறையாமலும் 3 நிமிடத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். Mixed song பயன்படுத்தக் கூடாது. போட்டிக்கான வீடியோ வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10.05.2025 முதல் 15.05.2025. சிறந்த நடனங்கள் 20.05.2025 அன்று முதல் 31.05.2025 வரை Youtube - ல் ஒளிபரப்பப்படும்.
- குழுநடனப் போட்டியானது 28.06.2025 அன்று முளகுமூட்டில் வைத்து நடைபெறும் கலைவிழாவில் நேரடியாக, போட்டியாக நடைபெறும். அன்றைய தினம் தனிநபர் நடனத்தில் பரிசினை வென்றவர்களின் நடனங்கள் அரங்கத்தில் அரங்கேற்றப்படும்.
- தனிநபர் நடனங்கள் MP4 Document format – ல் பதிவு செய்து, அத்துடன் பெயர், வயது, முகவரி, பங்கு அல்லது கிளைப்பங்கின் பெயர், அன்பிய எண், அலைப்பேசி எண், வட்டாரத்தின் பெயர் ஆகியவைப் பதியப்பட்டு அனுப்ப வேண்டும். பதிவுக்கட்டணம் ரூ. 50
- Video Record செய்யப்பட்ட நடனங்கள் edit – செய்தல் கூடாது.
- நடனங்கள் அனுப்ப வேண்டிய அலைப்பேசி எண் – 8870513177
- குழுநடனப் போட்டிகள் பதிவு செய்ய கடைசிநாள் : 31.05.2025. அன்றையதினம் தேர்வு செய்யப்பட்ட பாடல்களுடன் பதிவுக்கட்டணம் ரூ. 100 செலுத்த வேண்டும்.
- பதிவுக்கட்டணத் தொகையை Video மற்றும் பாடல் அனுப்பும் நாளன்றே கீழ்குறிப்பிட்ட QR code மூலம்பணத்தை செலுத்தி அதற்கான ரசீதையும் 887051377 என்ற எண்ணிற்கு அனுப்பி வைக்கவும்.

### மதிப்பெண்கள் விபரம்

- ஒருங்கமைப்பு, அலங்காரம், முகபாவனை Like, Share, Views, subscribers, Comments இவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

- Like, Share, Comments, Views, Subscribers, நடனம் என அனைத்து பகுதிகளிலும் அதிகம் மதிப்பெண் பெறுகிறவர்களுக்கு சிறப்புப் பரிசு உண்டு.
- தனி நபர் மற்றும் குழுநடனத்தில் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து பகுதிகளிலும் முதல் மூன்று இடங்களை வகிக்கும் பங்கேற்பாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

### பரிசுகள் விபரம்

**தனிநபர்**

| 1 | 2 | 3 |
|---|---|---|
| 1001 | 701 | 501 |

**குழுநடனம்**

| 1 | 2 | 3 |
|---|---|---|
| 3001 | 2001 | 1001 |

Kamala M

UPI ID: mbkamala-1@okaxis



# NANJIL CATHOLIC SCHOOL[CBSE]

Vazhuthalampallam, Palapallam Post, Kanyakumari Dist, TN 629159,
Kuzhithurai Diocese

# ADMISSIONS OPEN!

PLAY SCHOOL,
PRE-KG TO XII




GRADE XI - COURSES OFFERED

- MATHS, ENGLISH, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
- COMPUTER, ENGLISH, PHYSICS, CHEMISTRY, MATHS
- COMPUTER, ENGLISH, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
- ACCOUNTANCY, ECONOMICS, ENGLISH, COMPUTER, BUSINESS STUDIES

OUR SALIENT FEATURES

- EXTRA CURRICULAR ACTIVITIES
- INSPIRING ENVIRONMENT
- FUTURE-READY SKILLS
- QUALITY EDUCATION
- STEM EDUCATION



## Congratulations

TO THE WINNERS OF CODEAVOUR - 6.0 (AI & ROBOTICS) COMPETITION



JENILIYA. K



NEEJA ARULDHAS



M. STEPHY

GRADE XII




BEST WISHES FOR YOUR
INTERNATIONAL LEVEL COMPETITION

QATAR NATIONAL CONVENTION CENTRE (QNCC)
QATAR

MAY 16TH & 17TH,
2025

**Apply Today and Secure Your Child's Bright Future!**

**7708949881, 6382112669**

www.nanjilschool.edu.in

| Most Rev. Dr.Albert G A Anasthas | Rev. Fr. B. Sargin Rubas | Rev. Fr. G. Geo | Dr. R. Resal Raj |
|---|---|---|---|
| The Chairman | Correspondent | Financial Administrator | Principal |